16. கா.சிவத்தம்பி, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை – 1998. பதிப்பு – 2014.
17. மா.இராமலிங்கம், நாவல் இலக்கியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை– 1998. பதிப்பு – 1999.
18. க.கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை-26.

19. www.azhiasudar.com
20. www.thoguppugal.com
21. www.classical in tamil.in

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | **3** | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | | **6** |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 4.2

**TAM 1426** **இலக்கிய வரலாறு –II** **4Hrs/4Cre**

**நோக்கம்:**

தமிழிலக்கிய மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இப்பாடம் தமிழிலக்கிய வரலாற்றை காலம் மற்றும் இலக்கிய வகைமைகள் அடிப்படையில் புரிந்துகொள்ளச் செய்யும் நீண்ட தமிழிலக்கியப்பரப்பின் செம்பாதியில் பிற்பகுதியை இப்பாடம் உள்ளடக்கும்

**கற்றலின் பயன்:**

1. சோழர் காலத்தில் எழுதப்பட்ட இலக்கண இலக்கிய படைப்புக்களை முழுமையாக தெரிநதுகொண்டு வகைப்படுத்திப் பார்க்கும் திறனைப் பெற்றிருப்பர்
2. சிற்றிலக்கியங்களைப் பற்றி முழுமையாக உள்வாங்கிக் கொள்வதோடு அவற்றை விளக்கும் திறனைப் பெற்றிருப்பர்.
3. நாயக்கர் ஆட்சிக்காலத்தோடு அக்காலத்தில் உருவான சிற்றிலக்கியங்களின் வருகையைப் பொருத்திப் பார்க்கும் திறனைப் பெற்றிருப்பர்.
4. ஐரோப்பியர் கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழ்ச்சமூகம் எவ்வாறு நவீனத் தன்மை அடைந்தது என்று புரியும் திறனைப் பெற்றிருப்பர்.
5. தமிழ்ச்சமூகம் பற்றிய வரலாறு முழுமையாக விளக்கப்படுவதால் இவற்றிலிருந்து சொந்தமாக எழுதும் திறனைப் பெற்றிருப்பர்.

கூறு 1. பிற்கால சோழர்கால இலக்கியங்களும் இலக்கணங்களும் : பிற்கால சோழர் எழுச்சி - இலக்கியங்களைத் தொகுத்தல் என்னும் செயல்முறை - திருமுறைகள் - சைவசாத்திரங்கள் - வைணவம் - நாதமுனிகள் - வைணவ உரைகள் - பெரியபுராணம் தொடர்ச்சியாய்த் திருவிளையாடல் புராணம் -

கூறு 2. சோழர்கால காப்பியத் தேய்வும் சிற்றிலக்கியங்களின் வரவும்: நன்னூல்- வீரசோழியம்- நேமிநாதம் போன்ற இலக்கண நூல்கள். 96 சிற்றிலக்கிய வகைகள் - உரையாசிரியர்களின் பெருக்கம் - பெருங்காப்பியம் தேயவும் சிற்றிலக்கியம் தோன்றவும் உண்டான காரணங்கள்.

கூறு 3. நாயக்கர் காலம் : பரணி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், தூது, உலா போன்றவை – அரசர்களும் வீரர்களும் பாடப்படுதல் - சமூக அடிநிலை மாந்தர்கள் பாடப்பெறுதல் - முக்கூடற் பள்ளு குற்றாலக் குறவஞ்சி – தலபுராணங்கள் - சித்தர் பாடல்கள் - தனிப்பாடல்கள்.

கூறு 4. ஐரோப்பியர்களின் வருகை: சமயப் பரவல் - உரைநடை அறிமுகம் - புதிய வசன நடை – அச்சுப் பண்பாடு- அகராதிகள், எழுத்து சீர்திருத்தம் - பழைய ஏடுகள் அச்சேறல் - புலவர்கள் வரலாறு – வரலாறு எழுதும் புதிய நடைமுறை – நாவல், சிறுகதை அறிமுகம் - செய்யுள் அடைந்த புதுக்கவிதை வடிவம்.

கூறு 5. நவீன இலக்கியங்கள்: புதுக்கவிதை எழுச்சியில் பாரதியார் பாரதிதாசன் ந.பிச்சமூர்த்தி - இதழ்கள் இதழியல் நடை – நாவல்களின் பெருக்கமும் நிதான மடைதலும் - புதிய தமிழ் உரைநடை மற்றும் தனித்தமிழ் இயக்கம் உள்ளிட்டவை – தமிழாரய்ச்சி - இலக்கிய இயக்கங்கள் - நாட்டாரியலும், தொல்லியலும் - இருபதாம் நூற்றாண்டின் கடைசி இருபதாண்டு போக்குகள்.

**6. பாடநூல்**

1.அ.கா. பெருமாள் - தமிழிலக்கிய வரலாறு

2.எஸ்.ஸ்ரீகுமார் சுதர்சன் புக்ஸ், நாகர் கோவில்

## 7. பார்வை நூல்கள்


1.ஆ.வேலுப்பிள்ளை - தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும் குமரன் பதிப்பகம், கொழும்பு – சென்னை 2006

2.க.கைலாசபதி - தமிழ் நாவல் இலக்கியம், குமரன் பதிப்பகம், கொழும்பு – சென்னை 2006

3.மு.வரதராசனார் - தமிழ் இலக்கிய வரலாறு- சாகித்ய அகாடமி வெளியீடு

4.கா.மீனாட்சி சுந்தரம் - ஐரோப்பியர்களின் தமிழ்பணி- சென்னைப்பல்கலைக்கழகவெளியீடு.

5.மது.ச.விமலானாந்தம் - தமிழிலக்கிய வரலாறு

6.மயிலைசீனி. வேங்கடசாமி - பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழிலக்கியம், மெய்யப்பன் தமிழாய்வகம் - சிதம்பரம்

7.ஆ.கி. பரந்தாமனார் - நாயக்கர் காலம்.

8.வை.சதாசிவ பண்டாரத்தார் - பிற்கால சோழர் வரலாறு அண்ணாமலை பல்கலைக்கழகம் - சிதம்பரம்.


| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.4

## TAM 1210 திரைப்பட ரசனையும் குறும்படத் தயாரிப்பும் 3Hrs/2Cre

**நோக்கம்:**

திரைப்படக் கலையின் அடிப்படைகளை அறியச்செய்வதன் மூலம் மாணவர்களின் திரைப்பட ரசனையை மேம்படுத்தி குறும்படத்தயாரிப்பில் பங்கு பெறச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும். இதன் மூலம் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், விளம்பரங்கள் உள்ளிட்ட காட்சி ஊடகங்களில் தங்கள் ஆர்வங்களைப் பட்டை தீட்டிக் கொள்ளும் வாய்ப்பை மாணவர்கள் பெறுவர் திரைக்கலையின் அடிப்படைகள் - திரைப்படம் எனும் கூட்டுக்கலை – திரைப்படம் எனும் அறிவியல் கலை.

**கற்றலின் பயன்:**

1. திரைமொழியின் அடிப்படைகளை அறியச் செய்வதன் மூலம் அவற்றைப் பற்றிய விளக்கம் பெறுவர்.
2. குறும்படங்கள், முழுநீளத் திரைப்படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை புரிந்துகொள்வர்.
3. உலகளவிலான படங்களைத் திரியடுவதன் மூலம் சிறந்தவற்றை அடையாளம் காண்பர்.
4. மேலே கற்றவற்றைப் பயன்படுத்திக் குறும்படத்திற்கான திரைக்கதைகளை உருவாக்குவர்.
5. குழுவாக இணைந்து ஒரு குறும்படத்தைத் தயாரிப்பதன் மூலம் தங்கள் படைப்பாற்றலை வெளிக்காட்டும் திறன் பெறுவர்.

கூறு 1: ஷாட் வகைள் - கோணங்கள் - கேமரா அசைவுகள் - படத்தொகுபில் அர்த்தம் கொள்ளும் சினிமா

கூறு 2: குறும்படங்களின் தேவைகள் - வகைகள் - குறும்படங்களும் பெரும் படங்களும் வேறுபடும், ஒன்றிணையும் புள்ளிகள்.

கூறு 3: சிறந்த குறும்படங்களை (உலகளவிலான மற்றும் தமிழ்) திரையிட்டு அதன் சிறப்புக்கள் தயாரிப்பு முறைகளை விவாதித்தல்.

கூறு 4: குறும்படங்களுக்கான திரைக்கதையை உருவாக்குதல் - படத்தயாரிப்பின் மூன்று நிலைகள் (தயாரிக்கும் முன் - படப்பிடிப்பு – படப்பிடிப்புற்குப் பின்)

கூறு 5: குறும்படத் தயாரிப்பு : மாணவர்களைக் குழுக்களாகப் பிரிந்து 5 லிருந்து 15 நிமிடங்களுக்குள்ளான படங்களைத் தயாரிக்கச் செய்வதன் மூலம் குறும்படத் தயாரிப்பு முறைகளையும் நுணுக்கங்களையும் செயல்வழிமூலம் கற்கச் செய்தல்.

இப்பாடத்தின் அகமதிப்பீட்டுத் தேர்வுகள் 50% எழுத்துத் தேர்வாகவும் 50% செய்முறைப் பயிற்சியாகவும் அமையும். புறமதிப்பீட்டுத் தேர்வு 100% செய்முறைப் பயிற்சியாக அமையும்.

**பரிந்துரை நூல்கள்**


1. கதை நேரம் : கதைகள் திரைக்கதைகள் (பாகம்1 & 2) பாலுமகேந்திரா, 2012, வம்சி புக்ஸ்.
2. சினிமா ஓர் அற்புத மொழி – எம்.சிவக்குமார், 2003, சவுத் விஷன் வெளியீடு.
3. சொல்லப்படாத சினிமா (தொகுப்பு) – ப.திருநாவுக்கரசு, 2004, நிழல் வெளியீடு.
4. Basic Tool Kit & Resource Guide for Young Film Makers – AFT American Film Institute, 2008.


| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | | **4** | | |
| **CO3** | | **2** | | | | |
| **CO4** | | | **3** | | | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.4

**TAM 1212** **தமிழக வரலாறும் பண்பாடும்** **3Hrs/2Cre**

**நோக்கம்:**

தமிழக வரலாற்றையும் அதன் பண்பாட்டுக் கூறுகளையும் இலக்கியச் சான்றுகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் கற்கச் செய்தல் இப்பாடததின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. தமிழக வரலாற்றை இலக்கிய சான்றுகள் மற்றும் வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் மாணவர்கள் வரையறை செய்யும் திறனை பெற்றிருப்பர்.

2. தமிழக வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் அடிப்படைச் சான்றுகளை வகைப்படுத்தும் திறனை மாணவர்கள் பெற்றிருப்பர்.

3. சங்க காலம், சங்கம் மருவிய காலம் களப்பிரர் காலம், பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம், பிற்காலப் பாண்டியர், காலம் தென்னகத்தில் இஸ்லாமிய ஆதிக்கம், விஜய நகரப் பேரரசு, நாயக்கர் காலம் ஐரோப்பியர் காலம், விடுதலைக்கு பின் தமிழகம் எனக் கால வரிசையில் மாணவர்கள் தமிழக வரலாற்றை விவரிக்கும் திறனை பெற்றிருப்பர்.

4. பேரரசுகளின் தோற்றம் ஆட்சி, முறை, சமயம், கட்டிடக் கலை, நிர்வாகம், போர் முறை ஆகிய கூறுகளை மாணவர்கள் மதிப்பீடு செய்யும் திறனைப் பெற்றிருப்பர்.

5. சமுதாயம், சமயம், போர் உணர்வு, தொழில், சடங்கு, பண்பாடு, தமிழகப் பேரரசுகள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் என்பவற்றின் பின்னணியுடன் தமிழக வரலாற்றை மாணவர்கள் பொருத்திப்பார்ப்பர்.

**கூறு 1** :தமிழக வரலாற்றை அறிய உதவும் அடிப்படை வரலாற்றுச் சான்றுகள், தமிழகத்தின் நிலவியல் வரலாற்றுடன் கொண்ட தொடர்பு, வரலாற்றுக்கு முற்பட்ட காலம், தமிழகத்தின் நில எல்லை, குமரிக்கண்டம், கடற்கோள். -

**கூறு 2** :சங்கம் இருந்தமைக்கான சான்றுகள், சங்ககாலத் தமிழர் வாழ்வியல் (சமுதாயம், சமயம், போர், உணவு, தொழில், சடங்கு, பண்பாடு) தமிழகம் அயல்நாட்டுடன் கொண்ட வாணிக தொடர்புகள், தமிழக மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையேழு வள்ளல்கள்.

**கூறு 3** :களப்பிரர் வருகை, பல்லவ பேரரசுகளின் தோற்றம், பல்லவர் சாளுக்கியர் போர், பல்லவர் ஆட்சிமுறை, சமயம், கட்டிடக் கலை, பிற்காலச் சோழப் பேரரசு, ஊராட்சி, அரசியல், சமயம், கோவில் பணி, சோழர் வீழ்ச்சி.

**கூறு 4** :பிற்காலப் பாண்டியர்களின் எழுச்சி, தென்னகத்தில் இஸ்லாமிய ஆதிக்கம், பாண்டியர் வீழ்ச்சி, நாயக்கர், விஜய நகர பேரரசு தோற்றம், நாயக்க மன்னர்கள்,பாளையபட்டு ஆட்சி முறை, நாயக்கர் கால சமயம், கலைகள், தஞ்சை மராட்டியர்.

கூறு 5 :தமிழகத்தில் ஐரோப்பியர் வருகை கிறிஸ்தவ மத பரவல் ஆங்கிலேயே ஆட்சியின் விளைவுகள், விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு, விடுதலைக்குப் பின் தமிழகம் 1969 வரை.

**பார்வை நூல்கள்**

1.முனைவர்.க.வெங்கடேசன், முற்காலத் தமிழ்நாட்டு வரலாறு, வி.சி.பப்ளிகேஷன்ஸ், இராஜபாளையம் -117.

2.ஆ.இராமகிருட்டிணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கிய பண்ணை, மதுரை -1.

3.மா.இராஜமாணிக்கனார், தமிழக வரலாறும் பண்பாடும், NCBH வெளியீடு, சென்னை, 98.

4.செவல் குளம் ஆச்சா, மதுரை நாயக்க மன்னர்கள், சுரா பதிப்பகம், சென்னை.

5.முனைவர்.குரு ஜெகந்நாதன், வெற்றித் திருநகர் (விஜய நகர சாம்ராஜ்ஜிய வரலாறு), மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி வெளியீடு, மதுரை.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.2

**TAM 1214 / TAS 1214** **அடிப்படைத் தமிழ் II** **3Hrs/2Cre**

**நோக்கம்:**

தமிழை முதன்மைப்பாடமாகப் பயிலாத மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் அடிப்படைகளான வினை வடிவங்கள், வேற்றுமைத் தொகைகள், எண்கள், தமிழ்நாட்கள், மாதங்கள் ஆகியனவற்றை விளக்கி சிறுவாக்கியங்களை அறிமுகம் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் அடிப்படையான மரபு இலக்கணங்களை அறிந்து அவற்றைத் தேவைக்கேற்ப பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருப்பர்.
2. வினைச்சொற்கள், அவற்றின் உறுப்புக்கள், எண்வகை வேற்றமைகள், அறுவகைத் தொகைகள் ஆகியன பேச்சு வழக்கில் வருவதை அறிந்து தெளிவதையும் அவற்றைப் பாங்காகப் பயன்படுத்தும் திறன் பெறுதலையும் ஒரு சேரப் பெற்றிருப்பர்.
3. தமிழ் எண்கள் நூறு வரை எழுதிப் பழகும் திறன் பெற்றிருப்பர்.
4. தமிழ் நாட்களின், மாதங்களின் பெயர்களையும் எழுதும் பெற்றிருப்பர்.
5. சிறிய தொடர்களை அமைக்கும் முறையை அறிந்து கொள்வதோடமையாது பிழையின்றிப் பார்க்கும் முறையையும் அறிந்திருப்பர்.

**கூறு 1**: வினைச்சொற்கள் - நிகழ்கால இடைநிலைகள் - எதிர்கால இடைநிலைகள் - இறந்தகால இடைநிலைகள் - சந்தி – சாரியை.

**கூறு 2**: வேற்றுமைகள் விளக்கம் – உருபுகள் - எழுவாய் வேற்றுமை – கருவிப்பொருள் வேற்றுமை – கொடைப் பொருள் வேற்றுமை, நீங்கல் பொருள் வேற்றுமை – உடமைப் பொருள் வேற்றுமை - இடப்பொருள் வேற்றுமை – விளி வேற்றுமை – செயபடுபொருள் வேற்றுமை.

**கூறு 3**: எண்கள் - 51 – 100. தமிழில் எழுதப்பழக்குதல்

**கூறு 4**: தமிழ் நாட்கள் - மாதங்கள் - பெயா்களை அறிமுகப்படுத்துதலும் எழுதப்பழக்குதலும்

**கூறு 5**: சிறிய வாக்கியங்களை அறிமுகப்படுத்திப் பிழையின்றி எழுதப்பழக்குதல் - தமிழ்ப் பழமொழிகளை அறிமுகப்படுத்துதல்.

**பாட நூல்**: தமிழ்த்துறை வெளியீடு.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | | | **4** | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | **3** | | | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.4

**TAM 1216 / TAS 1216** **சிறப்புத் தமிழ் - II** **3Hrs/2Cre**

**நோக்கம்:**

தமிழில் காலந்தோறும் எழுந்த இலக்கியங்களைப் பொருண்மை நோக்கில் விளக்கி, அந்தந்தக்கால இலக்கியங்களின் பகுதிகளைக் கற்கச் செய்வதன் மூலமாக மரபிலக்கிய அறிமுகத்தைப் பெறச்செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. சங்க இலக்கியக் கவிதைகளை முறையாக வாசிக்கும் திறனைப் பெற்றிருப்பர்.
2. காப்பிய இலக்கியம் பற்றிய புரிதலை உள்வாங்கிக் கொள்வதோடு வகைப்படுத்தும் திறனையும் பெற்றிருப்பர்.
3. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கருத்தியல் நிலையில் ஒன்றுபடும் வேறுபடும் விதத்தினை இணைத்துப் புரிந்துகொள்ளும் திறனைப் பெற்றிருப்பர்.
4. சிற்றிலக்கியங்களில் மையமாகும் கருத்தியல் குறித்து விவாதிக்கும் திறனைப் பெற்றிருப்பர்.
5. சங்க இலக்கியங்களிலிருந்து நவீன கால இலக்கியத் தொடக்கம் வரைக்கும் அறிமுகம் ஆவதனால் முறையாகப் போட்டித்தேர்வுக்குத் தயாராகும் திறனைப் பெற்றிருப்பர்.

**கூறு 1 :** சங்க காலம், சங்க மருவிய காலப் பின்னணி விளக்குதல் (குறுந்தொகை, 5 பாடல்கள், புறுநானூறு….. திருக்குறள் - மூன்று அதிகாரங்கள்)

கூறு 2 : காப்பிய இலக்கியம் வகை, பின்னணியை விளக்குதல். மதுரைக் காண்டம், வழக்குரைக் கதை சிறுபகுதி

கூறு 3 : பக்தி இலக்கியம் அறிமுகம், நாயன்மாா்கள், ஆழ்வாா்கள் அறிமுகம் நிலையில் விளக்கு காரைக்கால் அம்மையார் 5-பாடல் ஆண்டாள் 5 பாடல்.

கூறு 4 : சிற்றிலக்கியம் தோற்றம் பின்னணி, உலா இலக்கியத்தின் அமைப்பு, மூவருலா மூன்று அரசா்களைப் பற்றி 15 பாடல்கள்.

கூறு 5 : சித்தா் இலக்கியம், பின்னணி சிவவாக்கியா், பாம்பாட்டிச்சித்தா்.

<u>பாடநூல்</u>: தமிழ்த்துறை வெளியீடு

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | **4** | | |

MEAN : 3.2

**TAM 1428** **நாட்டுப்புறவியல்** **5Hrs/4Cre**

**நோக்கம்:**

நாட்டுப்புறவியல் எனும் துறையை அறிமுகம் செய்வித்து, நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பிணைந்துள்ள பண்பாட்டுச் செயல்பாடுகளைக் கோட்பாடுகளின் வழி புரிந்துகொள்ளச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகளை அடையாளப்படுத்தி (Identify) புரியும் திறன் பெற்றிருப்பர்.
2. வாய்மொழி இலக்கியத்திற்கான பண்புகளை விளக்கி (Explain) வாய்மொழி மற்றும் செவ்வியல் இலக்கியங்கள் இணையும் மற்றும் வேறுபடும் (Differentiate) இடங்களைப் புரியும் திறன் பெற்றிருப்பர்.
3. நாட்டுப்புற வழக்காறுகள் காலந்தோறும் சூழலுக்கு ஏற்றவாறு தங்களுக்குள் சுருங்கி விரியும் தன்மைபெற்று வளர்ச்சியடைந்தமையைச் (Develop) சான்றுகளுடன் மாணவர்கள் அறியும் திறனடைவர்.
4. நாட்டுப்புற வழக்காறுகள் நிகழ்த்தப்படும் சூழல்களைக் கூர்ந்தறிந்து (Focus) கற்கும் திறன் பெற்றிருப்பர்.
5. நாட்டுப்புற வழக்காறுகளுக்கும் சமூகத்திற்குமான உறவினை மதிப்பீடு (Evaluate) செய்யும் பயிற்சி பெற்றிருப்பர்.

**கூறு:1** நாட்டுப்புறவியல் விளக்கம் - அறிஞர்களின் கருத்துகள் - நாட்டுப்புறவியல், நாட்டுப்புறம், நாட்டார் ஆகிய சொற்களுக்கான வரையறைகள் - ஐரோப்பிய – தமிழ்ச்சூழலில் அறிஞர்களிடைய நடைபெற்ற விவாதங்கள் - வழக்காறுகள் குறித்த விளக்கங்கள் - சூழல் (Context), பாடம்(Text), இழைவு (Texture) அடிப்படையில் வழக்காறுகளை நிர்ணயம் செய்தல் - வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகளை அடையாளம் காட்டுதல் - வழக்காறுகளுக்கு இடையிலான தொடர்பினைச் சுட்டுதல்.

கூறு:2 வாய்மொழி இலக்கியப் பண்புகள் - பாரி-லார்டு கோட்பாடு - செவ்வியல் இலக்கியப் பண்புகள் - வாய்மொழி மற்றும் செவ்வியல் - இவை இரண்டும் இணையும் மையப்புள்ளிகள் - வேறுபடும் இடங்கள் - வாய்மொழி மரபின் தொடர்ச்சியே செவ்வியல் மரபு என்கிற விவாதம் - பாணர் - புலவர் மரபு - சங்கப் பாடல்களைச் சான்று காட்டி விளக்குதல்.

கூறு:3 நாட்டுப்புறப் பாடல்கள் - தாலாட்டு - ஒப்பாரி - குழந்தைப் பாடல்கள் முதலானவை - பழமொழிகள் - விடுகதைகள் - சூழல் அடிப்படையில் விளக்குதல்.

கூறு:4 நாட்டுப்புறக் கதைகள் - இயற்கை, தெய்வம், பேய் முதலியன பற்றிய கதைகள் - உயிரியங்கள் பற்றிய கதைகள் - அரசன், நீதி, அறம் பற்றிய கதைகள் - குடும்பம் பற்றிய கதைகள், சங்கிலித் தொடர்கதைகள் முதலானவை - நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் - பண்புகள் - வகைகள் - மதுரைவீரன் காத்தவராயன் கதைப்பாடல்களை எடுத்துக்காட்டல்.

கூறு:5 நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் - திருவிழாக்கள் - சடங்குகள் - நிகழ்த்தும் களம், காலம், நிகழ்த்தும் முறைகள் இவற்றிக்கிடையிலான உறவுகளை விவாதித்தல் - நாட்டுப்புற விளையாட்டுகள் - அகப்புற விளையாட்டுகள் - சமூகப் புலப்பாட்டுத் திறன் - நாட்டுப்புற மருத்துவம் - மாற்று மருத்துவ மரபுகள்.

**பயன்படும் நூல்கள்**


தே.லூர்து — **'நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள்'**
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

ஆறு.இராமநாதன் — **'தமிழர் கலை இலக்கிய மரபுகள்'**
மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

ஆறு.இராமநாதன் — **'நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்'**
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஆறு.இராமநாதன் — **'நாட்டுப்புறக்கலைகள்'** (நிகழ்த்துக்கலைகள்)
மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

சு.சக்திவேல் — **'நாட்டுப்புற இயல் ஆய்வு'**
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

சு.சண்முகசுந்தரம் — **'நாட்டுப்புற இயல்'**
மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சா.சைமன்ராஜ்(பதி.ஆ) — **'தமிழக நாட்டுப்புறவியல்' (வரலாறும் போக்குகளும்)**
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

இ.முத்தையா — **'நாட்டுப்புற மருத்துவ மந்திரச் சடங்குகள்'**
அன்னம், சிவகங்கை.

இ.முத்தையா — **'நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும்'**
அரசு பதிப்பகம், மதுரை

தே.ஞானசேகரன் — **'மக்கள் வாழ்வில் மந்திர சடங்குகள்'**
பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

தே.ஞானசேகரன் — **'மந்திரம் சமயம் சடங்குகள்'**
பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.

தர்மராஜ் — **'தமிழ் நாட்டுப்புறவியல் (பெண்கள், கவிஞர்கள், தெய்வங்கள்)'**
புலம் வெளியீடு, மதுரை.

வே.சரோஜா — **'மண்ணின் மணம்'**
வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை.

இரா.பாலச்சந்திரன்(பதி.ஆ) — **'தமிழ்க்கதைப்பாடல்கள்'**
சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

ஆ.சிவசுப்பிரமணியன் — **'மந்திரமும் சடங்குகளும்'**

| | |
|---|---|
| | மக்கள் வெளியிடு, சென்னை. |
| ஆ.சிவசுப்பிரமணியன் | **'நாட்டார் வழக்காற்றியல் அரசியல்'** |
| | கங்கு வெளியீடு, சென்னை. |
| சேவியர் அந்தோனி | **'ஈர்ப்பு விசை' (பயன்பாட்டு நாட்டுப்புறவியல் ஆய்வுகள்)** |
| | வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல். |
| Richard. M. Dorson | **'Folklore and Folklife'** |
| | University of Chicago Press, Chicago. |
| Alan Dundes | **'Interpreting Folklore'** |
| | Indiana University Press, |
| | Bloomington. |

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | **5** | |

MEAN : 3

---

**நோக்கம்:**

பொதுத்தமிழ் பயிலும் மாணவா்களுக்குப் பகுதி I பிரிவில் அமைகிறது இப்பாடம். முதலிரண்டு பருவங்களில் பயின்ற இலக்கியங்களுக்கு முந்தைய காலகட்ட இலக்கியங்களை அறிமுகப்படுத்துகிறது. அந்தவகையில் காப்பியங்கள் தொடங்கி நவீன இலக்கியம் தொடங்குவதற்கு முன்பு வரையிலான இலக்கியங்கள் இப்பாடத்திற்குள் அடங்கும்.

கற்றலின் பயன்:

1. இலக்கண வரையறைகளுக்கேற்ப அமைந்த காப்பியங்களை அடையாளங்காணும் திறன்பெற்றிருப்பர்.
2. பக்தி இலக்கியங்கள், படைக்கப்பட்ட காரணிகளை ஒப்பிட்டுப் பிறவற்றிலிருந்து வேறுபடும் பாங்கை அறியும் திறன்களைப் பெற்றிருப்பர்.
3. சிற்றிலக்கியங்களின் உள்ளடக்கத்தினை அக்காலகட்ட பின்னணியில் பொருத்திப் பார்க்கும் திறன்களைப் பெற்றிருப்பர்.
4. சித்தர் பாடல்கள் இலக்கியமாகவும் மெய்யியலாகவும் அமைந்துள்ள பாங்கினை பகுத்தறியும் திறன்களைப் பெற்றிருப்பர்.
5. காப்பியங்கள் பக்திபாடல்கள், சித்தர்பாடல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து திறனாய்வுகட்டுரைகளாக ஆக்குகிற ஆற்றல்களைப் பெற்றிருப்பர்.

**கூறு : 1 காப்பியங்கள்**

1. சிலப்பதிகாரம் - கனாத்திறம் உரைத்த காதை
2. மணிமேகலை - ஆதிரை பிச்சையிட்ட காதை
3. கம்பராமாயணம் - வாலி வதைப்படலம் (10 பாடல்கள்)

**கூறு : 2 பக்தியிலக்கியம்**

4. பன்னிரு திருமுறைகள் - 7ம் திருமுறை திருவெண்ணெய் நல்லூா் பதிகம் (7225-7234)

5 நாலாயிரத் திவ்யபிரபந்தம்- நாச்சியாா் திருமொழி (10 பாடல்கள்) (567-576)

**கூறு : 3 சிற்றிலக்கியம்**

6. திருக்குற்றாலக்குறவஞ்சி - 1.மலைவளம் - 2 பாடல்கள்
   2.நாட்டுவளம் - 2 பாடல்கள்

7. முக்கூடற்பள்ளு- 1.மழைக்குறி – தோ்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள்

8. கலிங்கத்துப்பரணி- காடுபாடியது - 5 பாடல்கள்

9. பிள்ளைத்தமிழ் - மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ் -தாலப்பருவம்

**கூறு : 4 சித்தா் இலக்கியம்**

10. திருமூலா் - சிறப்புப்பாயிரம் - (5 பாடல்கள்)

11. பட்டினத்தார் - 1.திருஏகாம்பமாலை- (4 பாடல்கள்)

- 2.தகனக்கிரியை - (4 பாடல்கள்)

12. சிவவாக்கியர் - உற்பத்தி நிலை அறிவுநிலை (5 பாடல்கள்)

**கூறு : 5 கட்டுரையிலக்கியம்**

13. பண்பாட்டு அசைவுகள் - தொ.பரமசிவன்
14. சான்றோன் - மயிலை.சீனி.வேங்கடசாமி
15. வரலாறு கூறும் பொற்காலங்கள் - ஆ.சிவசுப்பிரமணியம்
16. மண்ணிலிருந்து கவிதைக்கு (சங்கச்சித்திரங்கள்) - ஜெயமோகன்

**பாடநூல் :** தமிழ்த்துறை வெளியீடு, அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | | **4** | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.8

**TAM 2541** **சங்கம் - அகநெறி** **5 Hrs/5 Cre**

---

**நோக்கம்:** ஈராயிரமாண்டுத் தமிழ்க் கவிதைப் படைப்புமுயற்சியில் மைய இழையாகத் தொடர்ந்துவருகிறஅகநெறிக் கூறுகளைஅவ்வவ் காலகட்டங்களில் படைப்பாக்கம் பெற்றுள்ளகவிதைகளின் வாயிலாக இனங்கண்டுபயிலுதல் இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகஅமைகிறது.

கற்றலின் பயன்:

1. தமிழ் இலக்கண இலக்கியங்களின் வழியாக அகத்திணைப் பாகுபாட்டினை அறிந்து, அறநெறிக் காலத்தில் சங்க அக மரபின் தொடர்ச்சியையும் மாற்றத்தையும் கவிதைகளுக்குள் அடையாளப்படுத்தி புரியும் திறன் பெற்றிருப்பர்.
2. பக்திநெறிக் காலத்தில் அகமரபில் எழுந்த மாற்றங்களை இலக்கியங்களை மேற்காட்டி விளக்குவதன் வழியாக மாணவர்கள் முந்தைய அகமரபு நெறிகளை வேறுபடுத்திப் புரியும் திறன் பெற்றிருப்பர்.
3. தமிழ்க் காப்பியங்களில் அகமரபுகள் மாற்றமடைந்து புதிய அகமரபுகள் வளர்ச்சியடைந்தமையைச் சான்றுகளுடன் மாணவர்கள் அறியும் திறனடைவர்.
4. சிற்றிலக்கியங்களில் சங்க அகமரபு மாறிய விதங்கள் இலக்கியச் சான்றுகளின் வழியாகக் கூர்ந்தறிந்து கற்கும் திறன் பெற்றிருப்பர்.
5. தற்கால அகமரபுகளின் வளர்ச்சியில் பழமையும் புதுமையும் இணைந்திருக்கும் பாங்கினைத் தொகுத்து, மதிப்பீடு செய்யும் பயிற்சி பெற்றிருப்பர்.

**கூறு – 1:**திணைப்பாகுபாடு– அகநிலைக் களன்கள் - தலைவன் - தலைவி -களவு–கற்பு–பாங்கன் - தோழி–செவிலி–திணைக் கூற்றுப் பகுப்புஆகியஅகமரபுகளைச் சித்திரிக்கும் கவிதைகள் - அறநெறிக் காலத்தில் சங்க அக மரபின் தொடர்ச்சியையும் மாற்றத்தையும் சித்திரிக்கும் கவிதைகள். (குறுந்தொகை 10 பாடல்கள்,அகநானூறு 1,நற்றிணை 2,ஐந்திணைஐம்பது, (குறிஞ்சி 3),தினைமாலை நூற்றைம்பது (மருதம் 3),திணைமாலைஐம்பது (நெய்தல் 3),கார் நாற்பது 3.)

**கூறு – 2**:பக்திநெறிக் காலத்தில் அகமரபில் எழுந்தமாற்றம் - நாயகநாயகிபாவம் - இறைக் காதல் - பெண் மடலேறுதல் - தோழியின் இடத்தை அ.ஃறிணைப் பொருட்கள் பெறுதல். (சிறியதிருமடல் -2694-2708 வரிகள் திருமங்கையாழ்வார்)–தேவாரம்-4ஆம் திருமுறை(தூது –நாவுக்கரசர்)

**கூறு – 3:**தமிழ்க் காப்பியங்களில் அகமரபுமாறியவிதம் - கோவலன் கண்ணகியைநலம் புனைந்துரைத்தல் - தொடர்நிலைச் செய்யுள் - சுட்டிஒருவர் பெயர் கூறல் - கண்வழிப் புகுந்தகாதல் நோய் - வால்மீகியிடமிருந்துகம்பன் வேறுபடும் இடங்கள். (கம்பராமாயாணம் - மிதிலைக் காட்சிப் படலம் 12 பாடல்கள்,சிலம்பு–மனையறம்படுத்தகாதை 38 – 80)

**கூறு- 4:** சிற்றிலக்கியங்களில் சங்க அக மரபாகிய தூது, மடல் முதலானவை பெற்றவளர்ச்சிநிலைகள் - உலா,கலம்பகம் போன்ற கூறுகள் தனித்துவம் பெற்றமையைச் சுட்டல் - கைக்கிளைக் காதலின் இயல்புகளைக் கூறல் - அகமரபைஒட்டியும் மாறியும் எழுந்த தனிப்பாடல்கள். (குற்றாலக் குறவஞ்சி, நந்திக்கலம்பகம், முத்தொள்ளாயிரம், தனிப்பாடல் தேர்வு செய்யப்பட்டபகுதிகள்)

**கூறு – 5:**சமூகஅமைப்பில் ஏற்பட்டமாற்றத்தின் காரணமாக, அக மரபில் தோன்றியமாற்றம் - தற்காலஅகமரபுகளின் வளர்ச்சி–பழமையும் புதுமையும் இணைதல். (பாரதி–கண்ணம்மாளன் காதலி,பாரதிதாசன் - முதியோர் காதல்,மீரா,மு.மேத்தா,சுகிர்தராணி,குட்டிரேவதிதேர்வுசெய்யப்பட்டகவிதைகள்)

**பார்வை நூல்கள்**


1. டாக்டர். நா. சுப்புரெட்டியார்,அகத்திணைகொள்கைகள்,பாரிநிலையம்,சென்னை– 1,மு.ப. டிசம்பர் 1981.
2. வ.சு.ப. மாணிக்கம்,தமிழ்க் காதல்,சாரதாபதிப்பகம்,ராயப்பேட்டை,சென்னை– 14, ஜுன் 2007.
3. டாக்டர்.ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரதி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி,சென்னை– 5,மு.ப. 1985.
4. ம.பெ.சீனிவாசன்,ஆழ்வார்களும் கம்பரும்,மீனாட்சிபுத்தகநிலையம்,மு.ப. 2014.
5. முமணிவேல்,கைக்கிளைக்காதல்,பதிப்புத்துறை,மதுரைகாமராசர் பல்கலைக்கழகம்,மு.ப. 1992
6. டி.எஸ்.முருகேசன் தனிப்பாடலில் நவரசங்கள்,குறிஞ்சிப் பதிப்பகம்,சென்னை– 49 மு.ப. 2003.
7. பா.கொழந்தசாமி தமிழ்ப்புதுக் கவிதைகளில் அகப்பொருள் மரபுக்கூறுகள், அவ்வை அச்சுக்கூடம், சென்னை– 13,மு.


| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | **5** | |

MEAN : 3

---

**நோக்கம்**:

தொல் பழங்காலம் முதல் பாரதியார் காலம் வரை தமிழர்களின் இறை பற்றிய கருத்தாக்கத்தை அந்தந்தக் காலங்களின் கவிதைகள் கொண்டு அணுகுவது இந்தப் பாடத்திட்டத்தின் நோக்கம்.

**கற்றலின் பயன்:**

1. கவிதை தோன்றுதவற்கு முன் இருந்த வழிபாட்டு முறைகளையும் அதன் வளர்ச்சியையும் நிரல்படுத்தும் திறன் பெற்றிருப்பர்.
2. பல்வேறு சமயங்களின் கொள்கைகளையும், அவற்றிக்கிடையேயுள்ள இணக்கத்தையும் இணக்கமின்மையையும் தமிழ்ச் சமூகத்தில் அவை ஏற்படுத்திய தாக்கத்தினையும், இலக்கியங்கள்வழி புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பர்.
3. இப்பாடம் வழங்கிய சமய அறிவைப் பயன்படுத்தித் தமிழகத்தின் பல்வேறு வழிபாட்டுத் தலங்களின் நடைமுறையை வெளிநாட்டினர்க்கு எடுத்துரைக்கும் வன்மை பெற்றிருப்பர்.
4. சுமங் நல்லிணக்கத்திற்கு உகந்த வகையில் இலக்கியங்களைப் பயன்படுத்தித் திட்டமிடும் ஆளுமையையும் நடைமுறைப்படுத்தும் திறனையும் பெற்றிருப்பர்.
5. தற்சார்பின்றிப் புறவய நிலையில் சமய இலக்கியத்தை மதிப்பிடும் திறன் பெற்றிருப்பர்.

**கூறுகள்**

1. தொல் பழங்கால இறை வழிபாடு – நிலமும் தெய்வங்களும் – கொடிநிலை, கந்தழி, வள்ளி, நடுகல் வழிபாடு, வேலன் வெறியாட்டு, கொற்றவை வழிபாடு. இறைவனுக்கு என்று தனி இலக்கியம் தோன்றுதல் – திருமுருகாற்றுப்படை – பரிபாடல்.
2. சமண சமயத்தின் தாக்கம் – அதன் செல்வாக்கு, கொள்கைகள் – சிலப்பதிகாரம். பௌத்த சமயத்தின் தாக்கம் – அதன் செல்வாக்கு, கொள்கைகள் – மணிமேகலை.
3. வழிபாட்டில் சிவனும் திருமாலும் முக்கிய இடம் பெறுதல். காரைக்கால் அம்மையார், முதலாழ்வார்கள் மூவர். தலந்தோறும் இறைவனை வழிபடல் (திருமுறைத் தலங்கள் – மங்களாசாசனம் பெற்ற தலங்கள் – வைப்புத் தலங்கள் ஆகியவை). பக்தி இலக்கியத்தில் தமிழ் அகமரபு இடம் பெறல் – நாயகன் நாயகி பாவம். இறைவனை அரசனாகவும் குழந்தையாகவும் பாவித்தல். இசையும் தமிழ்க் கவிதையும் இணையும் பாங்கு – பண்ணொடு பாடுதல். சைவத்தில் சாத்திர நூல்கள் தோன்றுதல்.
4. ஞான வழி இறைவனை அடைதல் – திருமூலர், தாயுமானவர், வள்ளலார். சித்தர்கள் கருத்தாக்கம் – குறியீட்டு மொழிக் கொள்கை, உலக வாழ்வில் வெறுப்பு, பெண்ணாசை வெறுப்பு, இறைவனை அகத்தில் தேடுதல் போன்றவை. கிறித்தவம், இஸ்லாத்தின் வரவு – வீரமாமுனிவர், குணங்குடி மஸ்தான்.
5. நாட்டார் சமய மரபு – அதன் செல்வாக்கு, கொள்கைகள். கதைப்பாடல், கும்மிப்பாடல், அம்மாணை, வர்ணனைப் பாடல்கள் ஆகியன. பாரதியாரின் இறை பாடல்கள் – நாட்டார் மரபின் தாக்கம். சித்தர் இலக்கியத்தின் செல்வாக்கு ஆகியவை.

**பார்வை நூல்கள்**

1. அருணாசலம். ப., பக்தி இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1995.

2. கைலாசபதி. க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் புத்தக இல்லம், சென்னை, 1999.
3. சீனிவாசன். ம. பெ., வைணவ இலக்கிய வகைகள். தேவகி பதிப்பகம், சிவகங்கை, 1994.
4. சீனிவாசன். ம. பெ., ஆழ்வார்களும் தமிழ் மரபும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். 2010.
5. சீனி வேங்கடசாமி. மயிலை., பௌத்தமும் தமிழும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1940.
6. சீனி வேங்கடசாமி. மயிலை., சமணமும் தமிழும். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1957.
7. துரைசாமி பிள்ளை, ஔவை. சு. சைவ இலக்கிய வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1958.

**பாடல் பகுதிகள்**

1. காரைக்கால் அம்மை – அற்புதத் திருவந்தாதி (முதல் ஐந்து பாடல்கள்).
2. பொய்கையாழ்வார் – முதல் திருமொழி (முதல் ஐந்து பாடல்கள்).
3. திருஞான சம்பந்தர் – திருவெங்குரு பதிகம் (முதல் திருமுறை, 75வது பதிகம்).
4. திருநாவுக்கரசர் – திருக்கருகாவூர் பதிகம் (ஆறாம் திருமுறை. 15வது பதிகம்).
5. சுந்தரர் – திருநாட்டியத்தான்குடி (ஏழாம் திருமுறை, 15வது பதிகம்).
6. மாணிக்கவாசகர் – நீத்தல் விண்ணப்பம் ( முதல் பத்துப் பாடல்கள்).
7. நம்மாழ்வார் - திருவாய்மொழி முதற்பத்து (‘அஞ்சிறைய மடநாராய்’ பாசுரம்).
8. ஆண்டாள் - நாச்சியார் திருமொழி (‘கார்கோடல் பூக்காள்’ பாசுரம்).
9. திருமூலர் - முதல் தந்திரம் (ஐந்து பாடல்கள்)
10. சிவவாக்கியர் - சிவவாக்கியர் பாடல்கள் (தேர்ந்தெடுத்த ஐந்து பாடல்கள்)
10. வள்ளலார் - ஆறாம் திருமுறை (ஐந்து பாடல்கள்)
11. வீரமாமுனிவர் - தேம்பாவணி (தேர்ந்தெடுத்த ஐந்து பாடல்கள்)
12. குணங்குடி மஸ்தான் - மனோன்மணிக்கண்ணி (தேர்ந்தெடுத்த கண்ணிகள்)
13. முத்துப்பட்டன் கதைப்பாடல் - தேர்ந்தெடுத்த பகுதிகள்.
14 முளைப்பாரி கும்மி – தேர்ந்தெடுத்த பகுதிகள்
14. அழகர் வர்ணிப்பு – தேர்ந்தெடுத்த பகுதிகள்
15. பாரத அம்மாணை – தேர்ந்தெடுத்த பகுதிகள்
16. பாரதியார் - தேசமுத்துமாரி பாடல்.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | **5** | |

MEAN : 3.2

**TAM 2525** **நன்னூல் - எழுத்து** **5Hrs/ 5 cre**

---

**நோக்கம்:**

தமிழ் எழுத்துக்களின் அடிப்படையான இலக்கண இயல்புகளை விளக்கும் நன்னூல் எழுத்ததிகார இலக்கணத்தினை, சமகால மொழிப்பயன்பாட்டை மாணவர்கள் பிழையின்றிப் பயன்படுத்துவதற்கு ஏற்றவகையில், கற்பித்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. தமிழ் இலக்கண நூல்களுள் நன்னூல் கூடுதல் பயிற்று நோக்கத்துடன் எழுதப்பட்ட ஒரு மொழி இலக்கணம் என்பதை அடையாளங் காணும் திறன் பெற்றிருப்பர்.
2. மொழியின் அமைப்பொழுங்கில் எழுத்தியல் ஒரு முக்கியமான கூறு. எழுத்தியல் சிந்தனையும், அவற்றின் புனைவும், எழுத்துக்கள் தொழிற்படும் தன்மையும், அதன் விளைவாக ஏற்படும் வடிவ மாற்றங்களும் பற்றிய மொழி இயங்குமுறையை ஒப்பீட்டு ஆராய்ந்திருப்பர்.
3. இலக்கணச் செல்நெறியில் தமிழ் அடையாள மீட்டெடுப்புக்குக் காரணமாக அமைந்த வடஎழுத்து தமிழில் விரவிய நிலையைச் (தற்சம, தற்பவ) சமயப் பண்பாட்டு நோக்கில் மதிப்பீடு செய்யும் ஆற்றலைப் பெற்றிருப்பர்.
4. இலக்கணப்பிழைகள், புணர்ச்சி விதிகளின் பயன்பாடு குறித்த புரிதல்களைப் பயிற்சி அடிப்படையில் வெளிப்படுத்தும் திறன்களைக் கொண்டிருப்பர்.
5. தற்கால மொழியில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களை உள்வாங்கிய நிலையில் எழுத்திலக்கண வாசிப்பில் புதிய அணுகுமுறைகளைக் கண்டறியும் திறன்களைப் பெற்றிருப்பர்.

**அலகுகள்**

1. பாயிரவியல்:பாயிரவகை - நூல் வரலாறு–ஆசிரியர்,மாணவர் வரலாறு–கற்றல்,கற்பித்தல் முறைகள். (முதல் 56 நூற்பாக்கள் சிறப்புப் பாயிரம் உட்பட).
2. எழுத்தியல்: எழுத்திலக்கணம் - எண் - பெயர் - முறை–பிறப்பு–உருவம் - மாத்திரை– முதனிலை - இறுதிநிலை–மயக்கம் - போலி. (56 – 127ஆம் நூற்பாமுடிய).
3. பதவியல்: பதம் - பகுபதஉறுப்புக்கள் - பிறமொழிஆக்கம். (128 - 150ஆம் நூற்பாமுடிய).
4. புணரியல்: புணர்ச்சி வகைகள் - உயிரெழுத்துக்களின் பொதுப் புணர்ச்சி,சிறப்புப் புணர்ச்சி. (151 – 203ஆம் நூற்பாமுடிய).
5. புணரியல்: மெய்யெழுத்துக்களின் பொதுப் புணர்ச்சி,சிறப்புப் புணர்ச்சி - உருபுபுணர்ச்சி. (204 – 239: 240 - 257ஆம் நூற்பாமுடிய).

**பாடநூல்:**

நன்னூல் எழுத்ததிகாரம் மூலமும் விருத்தியுரையும், பொதுப்பதிப்பு சோம. இளவரசு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1990.

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | **5** | |

MEAN : 3

---

**நோக்கம் :** 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணினி மயப்படுத்தப்பட்ட (Computerized). இணைய வலைப்பின்னல் (Internet) tஅமைப்பிற்குள் செயல்படும். மின்னனுமயமான (Digitalized) ஊடகச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி தமிழில் இப்புதிய ஊடகங்களின் (மின்னஞ்சல், வலைத்தளங்கள், வலைப்பூக்கள், முகநூல், கானொளிக் காட்சிகள் இன்ன பிற) செயல்பாடுகள். அதன் வீச்சு சாதக பாதக அம்சங்கள் ஆகியனவற்றை அறிமுகப்படுத்தியும் விவாதித்தும் மாணவர் அவர்தம் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பிற்கும் இவ்வூடகங்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும்.

**கற்றலின் பயன்:**

1. தகவல் யுகத்தின் தோற்றம் - வளர்ச்சி - இன்றய நிலையை விளங்கிக் கொள்வர்.
2. இணைய உலகில் தமிழ் மொழி, இலக்கியம் சார்ந்த செயல்பாடுகளைப் இணைத்துப் பார்க்கும் திறன் பெறுவர்.
3. இணையம் சார்ந்து செயல்படும் திறன் பெறுவர்.
4. இன்றைய காட்சிக் கலாச்சாரத்தில் மின்னணுமயமான பிம்பங்களை விமர்சிக்கும் / பகுத்தாயும் திறன் பெறுவர்.
5. சமூக ஊடகங்களின் பின்னுள்ள வாணிபம், அரசியல், பண்பாட்டுத் திணிப்பு ஆகியவற்றை எதிர்நோக்கும் பக்குவம் பெறுவர்.

கூறு 1: தகவல் யுகத்தின் தோற்றம் - கணினி மற்றும் இணைய வெளிச் செயல்பாடுகள் பற்றிய அறிமுகம் - அறிவு, தொழில், அன்றாட வாழ்க்கை என வாழ்வின் எல்லா நிலைகளிலும் இணையம் இந்த நூற்றாண்டின் தவிர்க்க இயலாத அங்கமாக மாறியுள்ளமை விவாதிக்கப்படும்.

கூறு 2: தமிழ் மொழி மற்றும் இலக்கியம் சார்ந்த இணையச் செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்-உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றான தமிழ் கல்விப்புலம் கடந்து இயங்கிவருவதும் அதன் செயல்பாடுகள் நாளுக்குநாள் விரிவடைந்து வருவதும் விவாதிக்கப்படும்.

கூறு 3: மின்னஞ்சல்(EMail), வலைத்தளங்கள் (Websites)வலைப்பூக்கள் (Blogs) இணைய இதழ்கள்(Internet Magazines) இணைய நூலகங்கள்(Online Resource Centers) இணைய ஆதாரமையங்கள்( Online Resource Centers) ஆகியனவற்றின் செயல்பாடுகளும் பயன்பாடுகளும் அறிமுகப்படுத்தப்படும்.

கூறு 4: 21ஆம் நூற்றாண்டின் காட்சிக் கலாச்சாரத்தில் மின்னனுமயமான பிம்பங்களைப் (Digitalized Images)' புரிந்து கொள்வதன் அவசியம் பேசப்படும் கற்றல் கற்பித்தலுக்கான ஊடகமாக விளங்கும் காணொளிக்காட்சிகளின் (Vidos) பன்முகச் செயல்பாடுகள் விவாதிக்கப்படும்.

கூறு 5: முகநூல் மற்றுமான சமூக ஊடகங்களின் பின்னுள்ள வணிக நோக்கங்களும், அதனால் உருப்பெறும் புதுவகையான இளையோர் உளவியல் மாற்றங்களும் விவாதிக்கப்படும். விழிப்புணர்வோடு புதிய ஊடகங்களை அணுக வேண்டியதன் தேவை முன்னிறுத்தப்பெறும்.

- இப்பாடத்தின் அக, புற மதிப்பீட்டுத் தேர்வுகள் அனைத்தும் செய்முறைத் தேர்வுகளாக அமையும். தமிழ், ஆங்கிலத் தட்டச்சைத் தேவையான அளவுக்குக் கற்றுக் கொள்ளுதல், மின்னஞ்சல் கணக்குத் தொடங்கி அனுப்புதல், பெறுதல். தேவையான வலைத்தளங்களை கண்டறிதல், தகவல்களைத் தறவிக்கம் செய்தல், வலைப்பூ உருவாக்குதல், படங்கள் காணொளிகளைப் பதிவேற்றம் செய்தல் ஆகியன தனிநபர் மற்றும் குழுப் பணிகளாக (Individual and Group Projects) வழங்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

துணை நூல்கள்


1. James Watson., Media Communication, an Introduction to Theory and Process, 2003 Palgrave, Macmillan.
2. Vilanilam. J.V., Mass Communication in India, a Sociological Perspective, 2008. Sage.
3. Tony Schiratio and Jen Webb., Understanding Visual, 2007, Sage.
4. க.பூர்ணசந்திரன், தொடர்பியல் சமூகம் வாழ்க்கை 2011, அடையாளம் பதிப்பகம்
5. ஞாநி.மீடியா உறவுகள் 2000 ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்.


| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | | **2** | | | | |
| **CO2** | | | | **4** | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 4

**TAM 2429** **பிறமொழி இலக்கியம்** **5 Hrs /4 Cre**

---

**நோக்கம் :** உலகளாவிய அளவில் படைப்பாக்கம் பெற்றுள்ள நவீன இலக்கிய வகைமைகளையும் படைப்புக் கர்த்தாக்களையும் அறிமுகஞ் செய்து, அவற்றின்வழி, பிற மொழிகளில் நிலவிவந்துள்ள இலக்கியப் போக்குகளைத் தமிழ்மொழிவழி அறியச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும். மேலும், அயல்மொழிப் படைப்புப் பிரதிகளின் பன்முகப்பட்ட பண்புகளை, விதவிதமான கருத்தியற் பொருண்மைகளை அடையாளங்காட்டுதலும், உலக இலக்கியங்கள் மீதான வாசிப்பு ஆர்வத்தை வளரச் செய்தலும் இப்பாடத்தின் பிற நோக்கங்களாகும்.

* பிறமொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டு, தென்னிந்திய, இந்திய - ஆசிய - உலக அளவிலான நவீன இலக்கிய வகைமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திடும் குறிப்பிடத்தக்க நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் இப்பாடத்திற்கான பகுதிகளாக அமைவு பெறும்.

**கற்றலின் பயன்:**

1. உலகளாவிய அளவில் படைப்பாக்கம் பெற்றுள்ள நவீன இலக்கிய வகைமைகளை அடையாளங்கண்டு அவை தமிழ் இலக்கியப் பரப்பில் ஏற்படுத்திய தாக்கங்களை உற்றுநோக்குகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
2. தென்னிந்திய அளவிலான நவீன இலக்கிய மேதைகளைத் தெரிவு செய்து, அப்படைப்புகளில் உள்ள தனித் தன்மைகளைக் கண்டறியும் திறன்களை அடைந்திருப்பர்.
3. இந்திய அளவிலான நவீனயிலக்கியப் பிரதிகளில் தென்படுகிற தொன்மை, சிறப்புகள் முதலான அம்சங்களைப் பகுத்துப் பார்த்து அவற்றில் தென்படுகிற வாழ்வியல் கூறுகளை வேறுபடுத்தி அறிகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
4. ஆசிய அளவிலான நவீன இலக்கியப் படைப்புகளானவை, ஏனைய பிற புலங்களின் மீது செலுத்திய தாக்கங்கள் குறித்து மதிப்பீடு செய்கிற ஆற்றலை எய்தியிருப்பர்.
5. உலக இலக்கியச் சிறப்பாம்சங்களை ஒட்டுமொத்தமாகக் கூர்ந்து அவதானித்து, அவற்றைப் போலப் புதிதாகத் தமிழிலும் படைத்திடும் திறன்களை அடைந்திருப்பர்.

**கூறு 1 :** மொழிபெயர்ப்பிலக்கிய வாசிப்பு : தேவையும் பயன்பாடுகளும் / உலக - ஆசிய - இந்திய இலக்கியம் : விளக்கமும் விவரணைகளும் / தமிழ் மொழிபெயர்ப்பில் உலக - இந்திய இலக்கிய வகைமைகள் / தமிழிலக்கியப் பரப்பில் அயல்மொழி இலக்கியங்களின் தாக்கமும் பரவலும் / பிறமொழி இலக்கியம் மீதான வாசிப்பு முறைமையும் இரசனை மேம்பாடும்.

**கூறு 2 :** தென்னிந்திய இலக்கியம் : இந்திய இலக்கியச் சூழலில் தென்னிந்திய இலக்கியங்களின் தனித்தன்மைகள் / சமகாலப் படைப்பாளிகள் மற்றும் படைப்புகளின் பொதுமைகள்/

**i.மலையாளம் : நாவல்** - வைக்கம் முகமது பஷீர் - என் பால்யகால சகி

**சிறுகதை** - i. தகழி - மாத்தனின் கதை/

ii. எஸ்.கே. பொற்றேகாட் - ஆற்றங்கரையினிலே/

**கவிதை** குஞ்ஞுண்ணி - தொழில், மொழி, மரணம் பலவிதம், பீடிதா,

சச்சிதானந்தன் - இரிஞ்ஞாலக்குடா,

ஏ.அய்யப்பன் - இரவு உணவு,

என்.ஜி. ராதாகிருஷ்ணன் - அப்பாவும் நாயும்,

கே.ஜி.சங்கரப்பிள்ளை - பல போஸில் புகைப்படங்கள்.

**ii. தெலுங்கு : சிறுகதை** - பாலகும்மி பத்மராஜு - தொலைபேசி,

**கவிதை** - சரபண்ட ராஜு - நான் சாட்சிக் கூண்டில் ஏறுகிறேன்,

மகா சுவப்ன - பாட்டை நிறுத்துங்கள் பந்தத்தை அணைத்து விடுங்கள்,

சிகாமணி - கவனியுங்கள்! உருக்குப் பேனா முனைகள் முளைக்கின்றன,

மாத்தூரி நாகேஷ்பாபு - தலித்தாய்.

iii. **கன்னடம் : சிறுகதை** - மாஸ்தி வேங்கடேசய்யங்கார் - ஆன்சேக்ஸ்பியர்,

**கவிதை** - பி.ஆர்.லஷ்மணராவ் - நடுநிலை,

வைதேகி - தெரிந்தவர்களே சொல்லுங்கள், பைக்குள்ளே பார்க்கக் கூடாது,

சர்வ மங்களா - அவன் குமரன், பொம்மை.

**கூறு 3 :** இந்திய இலக்கியம் : தொன்மை, சிறப்பாம்சங்கள் / உலகயிலக்கியப் பரப்பில், இந்திய நவீன இலக்கியத்தின் இடமும் இருப்பும் / இலக்கியத்தினூடான சமூக, வரலாற்று வரைவுகள்/

*** நாவல்** : **வங்கம்** - மகாசுவேதாதேவி - 1084இன் அம்மா

*** சிறுகதை : i. கொங்கணி** - தாமோதர் மௌஜோ - மரணத்தை எதிர்நோக்கி,

**ii.ராஜஸ்தானி** - நிருஸின்ஹா ராஜ்புரோகித் - காத்திருத்தல்,

**iii.டோக்ரி** - பி.பி.சாத்தே - அன்பளிப்பு,

**iv. ஹிந்தி** - அசோக் சுக்லா - சைக்கிளைத் திருட்டுக்கொடுத்த சுகம்.

*** கவிதைகள் : i. வங்கம்** - தாகூர் - கீதாஞ்சலி

குதிராம்போஸ் - பத்து மாதங்கள் பத்து நாட்கள்,

சுனில் கங்கோபத்யாயா - நீராவுக்கு உடல்நலக்குறைவு,

**ii.சமஸ்கிருதம்** - ஏ.என். பாண்டே - விருப்பம்,

**iii. ஹிந்தி** - சுஜாதா - சவுதாரிமாலிகா - I, II, III,

- குன்வர் பெச்சைன் - வேறுபாடு,

**iv. குஜராத்தி** - ஜெயந்த் பார்மர் - தூக்குத்தண்டனை.

*** கட்டுரை : வங்கம்** - பக்கிம் சந்திரர் - பூனை.

**கூறு 4 :** ஆசிய இலக்கியச் செழுமைகள் / ஏனைய புலங்களின் மீது செலுத்திய தாக்கங்கள்/ நிலவியற் வெளிப்பாட்டுத் தன்மைகள்/

*** நாவல் : ருஷ்யா** - தாஸ்தயெவ்ஸ்கி - வெண்ணிற இரவுகள்,

*** சிறுகதை : i. சீனா** - துயான் மூ ஹாங் லியாங் - எக்ரெட் ஏரியின் துயரங்கள்,

**ii. ஜப்பான்** - ஹருகி முரகாமி - அமைதி,

**iii. ருஷ்யா** - ஆண்டன் சேகாவ் - பச்சோந்தி,

| | | | |
|---|---|---|---|
| | **iv. பாகிஸ்தான்** | - சதத் ஹசன் மண்டோ | - திற, |
| | **v. இலங்கை** | - கருணா பெரைரா | - இன்று என் மகன் வீடு வருகிறான். |
| *** கவிதைகள்** | **i.ருஷ்யா** | - ரசூல் கம்சதோவ் | - காகிதம் பற்றிய கவிதை |
| | **ii.வியட்நாம்** | - செலான் வியென் | - ஒரு தாயாக இருப்பது குறித்து, |
| | **iii.லெபனான்** | - கலில் ஜிப்ரான் | - சொத்தைப்பல், |
| | **iv.பங்களாதேஷ்** | - ரஸியாகான் | - கொடிய விலங்கு, |
| | **v.சிங்கப்பூர்** | - கிபோல்சிங் | - சிங்கப்பூர் வருபவர்க்கு, |
| | **vi.மலேசியா** | - செசில் ராஜேந்திரா | - விலங்குகள் பூச்சிகள் கூட்டம்-1984. |

**கூறு 5 :** உலக இலக்கியச் சிறப்பாம்சங்கள்/ உலக இலக்கிய முன்னோடிகள்/ பன்முகப் பண்பாட்டுப் பகிர்வுகள்/ அரசியல் நெருக்கடிசார் வரைவுகள்/ சோதனா முயற்சிகள்/

| | | | |
|---|---|---|---|
| *** நாவல்** | **அமெரிக்கா** | - எர்னெஸ்ட் ஹெமிங்வே | - கடலும் கிழவனும், |
| *** சிறுகதை :** | **i.அர்ஸென்டினா** | - ஜார்ஜ் லூயி போர்ஹே | - மணல் பிரதி, |
| | **ii.கொலம்பியா** | - மார்க்வெஸ் | - மூழ்கிப்போன மனிதன், |
| | **iii. பிரான்ஸ்** | - ஆல்பர்ட் காம்யு | - விருந்தாளி, |
| | **iv. ஜெர்மனி** | - ராபர்ட் நியூமான் | - துறவி, |
| *** கவிதைகள் :** | **i.அமெரிக்கா** | - வால்ட் விட்மன் | - புல்லின் இதழ்கள், |
| | | - ரேடூரம் | - துயரம் நிறைந்த கண்ணீர், |
| | | - ஸ்டர்லிங் ப்ரவீன் | - கிழவன் லெம், |
| | | - பார்பரா மால்கம் | - தூங்கப்பண்ண அம்மா சொன்ன கதை |
| | **ii.ப்ரெஞ்சு** | - ரூமர்கோடன் | - சில அபூர்வமான மௌனப் பிரார்த்தனைகள் |
| | **iii.சிலி** | - பாப்லோ நெரூடா | - புத்தகத்திற்கு ஒரு விளிப்பாடல், |
| | **iv.நியூசிலாந்து** | - ஜேம்ஸ் நார்க்ளி.்.ப் | - சோப்பின் உண்மைக் கதை, |
| | **v.இங்கிலாந்து** | - எட்வின் ப்ராக் | - மனிதனைக் கொல்ல ஐந்து வழிகள். |
| *** கட்டுரைகள்** | **i.மெக்ஸிகோ** | - ஆக்டோவியா பாஸ் | - மொழிபெயர்ப்பு என்ற கலை, |
| | **ii.நைஜீரியா** | - ச்சினுவா ஆச்சிபி | - நான் குளிக்கப் போவது இல்லை. |

**பாடநூல்கள்**

*** நாவல்கள் :**

1. வைக்கம் முகமது பஷீர், பால்ய கால சகி, தமிழில் : குளச்சல் மு.யூசுப், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 629 001, முதல் பதிப்பு - டிசம். 2009. விலை : 60
2. மகாசுவேதாதேவி, 1084இன் அம்மா, பரிசல் பதிப்பகம், சென்னை, விலை. ரூ60.
3. தாஸ்தயெவ்ஸ்கி, வெண்ணிற இரவுகள், என்.சி.பி.ஹெச்., சென்னை, விலை. ரூ60.
4. எர்னெஸ்ட் ஹெமிங்வே (நூ.ஆ.), எம்.எஸ். (மொ.பெ.ஆ.), கிழவனும் கடலும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 001, முதல் பதிப்பு - 2003. விலை : 50

**II.** பற்பல மொழிபெயர்ப்பு நூல்களுள் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றின் நகல்கள் அடங்கிய தொகுப்பு.

### பார்வை நூல்கள்


1. கா.அப்பாதுரைப்பிள்ளை, உலக இலக்கியங்கள், கழக வெளியீடு, சென்னை - 1, முதல் பதிப்பு - 1955.
2. க.நா.சுப்பிரமணியம், உலக இலக்கியம், புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியற்துறை வெளியீடு, புதுச்சேரி, 605 104, முதல் பதிப்பு - 1989.
3. ந.முருகேசபாண்டியன், தமிழ்மொழி பெயர்ப்பில் உலக இலக்கியம், உயிர்எழுத்துப் பதிப்பகம், திருச்சி, 2011.
4. இந்திரன், தோட்டத்து மேசையில் பறவைகள், இன்றைய ஐரோப்பிய புது எழுத்து, சந்தியா பதிப்பகம், சென்னை - 83, முதல் பதிப்பு - 2011.
5. அமரந்தா, பனியும் நெருப்பும் - லத்தீன் அமெரிக்க இலக்கியம் : ஓர் அறிமுகம், நிழல் வெளியீடு.
6. சிவலிங்கனார், உலகக் கவிதைகள், செல்வி பதிப்பகம், திருச்சி - 23, முதல் பதிப்பு - 2000.
7. வைரமுத்து, எல்லா நதியிலும் என் ஓடம், சூரியா லிட்ரேச்சர் லிமிடெட், சென்னை - 24, ஒன்பதாவது பதிப்பு - நவம். 2004.
8. க.பூரணச்சந்திரன், இந்திய மொழிகள் ஓர் அறிமுகம், நிவேதிதா பதிப்பகம்,
9. பா.ஆனந்தக்குமார், இந்திய ஒப்பிலக்கியம், கியூரி பப்ளிகேசன்ஸ், மதுரை,1997.
10. எச்.பாலசுப்பிரமணியம், இந்திய மொழி இலக்கியக் கட்டுரைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 98, முதல் பதிப்பு - 2014.
11. க.நா.சுப்பிரமணியம், இந்திய இலக்கியம், கலைஞன் பதிப்பகம், சென்னை.
12. க.நா.சு. ‘இந்திய இலக்கியம்’, கலைநுட்பங்கள், வேள் பதிப்பகம், சென்னை - 14, முதல் பதிப்பு - 1988.
13. பத்மாவதி விவேகாநந்தன், இலக்கியத்தில் அழகியலும் இலட்சியமும், வள்ளிசுந்தர் பதிப்பகம், சென்னை - 14, முதல் பதிப்பு - 2003.
14. ஏ.ஜி.வேங்கடாச்சாரி, இன்றைய இந்திய இலக்கியம், சாகித்ய அகாடமி, புதுதில்லி - 110 001, இரண்டாம் பதிப்பு - 2003.
15. வசந்த் செந்தில், சாளரம் - எட்கர் ஆலன்போ - ஒரு அறிமுகம், குமரன் பதிப்பகம், சென்னை - 17, முதல் பதிப்பு - 2002.
16. அரவிந்தன், கனவின் யதார்த்தப் புத்தகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 629001, முதல் பதிப்பு - 2011.


| Bloom’s Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | | **3** | | | |
| **CO3** | | | | **4** | | |
| **CO4** | | | | | **5** | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.8

**TAM 2202 / TAS 2202** **பொதுத்தமிழ் - IV** **3 Hrs/2 Cre**

---

**நோக்கம் :**

மரபார்ந்த இலக்கியங்களின்வழி பழந்தமிழ் மரபினையும் சங்க காலத் தமிழரின் பரந்துபட்ட வாழ்வியல் நெறிமுறைகளையும் மாணவர் அறியச் செய்வது இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கற்றலின் பயன்:**

1. மொழியைக் கற்றுக் கொள்வதில் இலக்கியத்தின் தேவை, இலக்கிய வகைகள் மற்றும் இலக்கிய வடிவங்கள் பற்றிய முழுமையான அறிமுகத்தைப் பெற்றிருப்பர்.
2. தமிழ்ச் சமூகத்தின் அடையாள உருவாக்கத்திற்குச் செவ்விலக்கியங்கள் முக்கிய வினையாற்றுகின்றன என்பதை அடையாளங் காணும் திறன் பெற்றிருப்பர்.
3. இலக்கிய வாசிப்புப் பயிற்சியின் மூலம் கவனச்செறிவுடன் இலக்கிய அழகியலை நுட்பமாக உணர்வதோடு கற்பனையாற்றலோடு படைப்பாக்கத்திறனிலும் மேம்படுவர்.
4. சங்கப் பனுவல்களை – அதன் கதையாடல்களைச் சமகால வாசிப்பு முறையியல் நோக்கில் அவதானித்து மதிப்பிடுவர்
5. இலக்கியக் கல்வியின் பயனாகச் சமூகப் பிரக்ஞையோடு தனித்துவம் மிக்கவராக, வாழ்க்கை மதிப்பீடுகளைச் சமன் நிலையில் எதிர்கொள்ளும் இயல்பினராக இருப்பர்.

**கூறு 1:**

சங்க இலக்கிய வகைகள் அறிமுகம் - அகத்திணை\ புறத்திணை சிறப்பியல்புகள் - சங்கம் மருவிய கால இலக்கியம் குறித்த அறிமுகம் - சங்கப்பாக்களின் பாடுபொருளான அறம் - புறத்திற்கு மாற்றாக அறம் பாடுபொருளான பாங்கினை விளக்குதல்.

கூறு 2:

எட்டுத்தொகை நூல்கள்

நற்றிணை – 5 பாடல்கள் (பாடல் எண்கள் 21,61,70,172,202)
குறுந்தொகை – 5 பாடல்கள் (பாடல் எண்கள் 3,8,23,40,58)
கலித்தொகை – பாலைக்கலி \ 2 பாடல்கள் (பாடல் எண்கள் 9,11)
புறநானூறு – 5 பாடல்கள் (பாடல் எண்கள் 12,86,278,279,312)
பரிபாடல் - வையை (15 அடிகள்)

கூறு 3:

பத்துப்பாட்டு நூல்கள்
பெரும்பாணாற்றுப்படை (45 அடிகள்)
நெடுநல் வாடை (85 அடிகள்)

கூறு 4:

புதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்
நாலடியார் - கல்வி அதிகாரம் \ 5 பாடல்கள் (பாடல் எண்கள் 131,132,133,135,138)
திருக்குறள் - அறத்துப்பால் - அடக்கமுடைமை
பொருட்பால் - கள்ளுண்ணாமை
இன்பத்துப்பால் - நலம் புனைந்துரைத்தல்

இனியவை நாற்பது – 5 பாடல்கள் (பாடல் எண்கள் 1,4,5,10,13)

பழமொழி நானூறு – 5 பாடல்கள் (பாடல் எண்கள் 5,55,60,61,243)

கூறு 5

கட்டுரைகள்

வ.சு.ப.மாணிக்கம் - தமிழ்க்காதல்

ரா.பி.சேதுப்பிள்ளை – ஆறும் ஊரும்

ஜெயமோகன் - சங்கச் சித்திரங்கள் \ கவிதையிலிருந்து மண்ணுக்கு

க.பூரணச்சந்திரன் - சங்க இலக்கியம்-மறுவாசிப்பின் தேவை

**பாட நூல்**

செய்யுள் தொகுப்பு

தமிழ்த்துறை வெளியீடு

அமெரிக்கன் கல்லூரி,மதுரை-625 002

| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | | **6** |

MEAN : 3.2

**TAM 2542** **சங்கம் - புறநெறி** **5Hrs/5 Cre**

---

**நோக்கம்:** சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை எழுந்துள்ள கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு, காலந்தோறும் மாறி வருகின்ற மனிதவாழ்க்கை, மதிப்பீடுகளுக்கேற்ப புறப்பொருள் மாறிவந்துள்ளமையைக் கற்றல். முதல் கூறில் தொல்காப்பியப் புறத்திணைகளோடும், ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலையோடும் பொருத்திப் பார்த்தல்.

**கற்றலின் பயன்:**

1. தமிழ் இலக்கண இலக்கியங்களின் வழியாகப் புறத்திணைப் பாகுபாட்டினை அறிந்து, நிலைத்தன்மையுடைய கருத்துகள் பாடுபொருளாகும் முறையினைக் கவிதைகளுக்குள் அடையாளப்படுத்தி புரியும் திறன் பெற்றிருப்பர்.
2. மனிதநேயத்தின் அவசியத்தைக் கூறும் கவிதைகளை அறநெறி மற்றும் பக்திநெறி இலக்கியங்களை மேற்காட்டி விளக்குவதன் வழியாக மாணவர்கள் முந்தைய புறமரபு நெறிகளை வேறுபடுத்திப் புரியும் திறன் பெற்றிருப்பர்.
3. தமிழ்க் காப்பியங்களில் புறமரபுகள் மாற்றமடைந்து புதிய அகமரபுகள் வளர்ச்சியடைந்தமையைச் சான்றுகளுடன் மாணவர்கள் அறியும் திறனடைவர்.
4. தொல்காப்பியத் துறைகள் சிலவும் சங்க இலக்கியப் புறத்துறைகளுள் சிலவும் சிற்றிலக்கியங்களில் பரிணமித்துள்ள போக்கினை இலக்கியச் சான்றுகளின் வழியாகக் கூர்ந்தறிந்து கற்கும் திறன் பெற்றிருப்பர்.
5. தற்காலக் கவிதைகளில் சூழலுக்கேற்ப உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் மாறிவரும் புறப்பொருள் கருத்துக்களைத் தொகுத்து, மதிப்பீடு செய்யும் பயிற்சி பெற்றிருப்பர்.

**கூறு 1:** சங்கக் கவிதையில் வீரம்,கொடைசிறப்புடைப் பாடுபொருளாதல் - இரவலா் - புரவலா் உறவு–போர்ச்சித்திரிப்பு–நிலைத்ததன்மைகருத்துக்கள் - நட்பு,கல்வி,புகழ்,குழந்தை. (புறநானூற்றில் 15 பாடல்கள்)

**கூறு 2:** சமண,பௌத்த மதங்களை வைதீகசமயம் வெற்றி கொண்டமை–மனிதநேயத்தின் அவசியத்தைக் கூறும் கவிதைகள். (நாலடியாா் 10,திரிகடுகம் 5,ஏலாதி 5,சிறுபஞ்சமூலம், களவழிநாற்பது 5,ஆசாரக்கோவை 5 –திருநாவுக்கரசா்,திருவாசகம் (பதிகம் 11)நான்காம் திருமுறை 10 பாடல்கள்,தேவாரம் (பதிகம் 98 )ஆறாம் திருமுறை 10 பாடல்கள்)

**கூறு 3:**காப்பியத்தில் அறம் சாா்ந்தகருத்துக்கள் பதிவான சூழலைக் குறிப்பிடல். (சிலம்பு–மதுரைக் காண்டம் ஆதிரைபிச்சையிட்டகாதை 11 வரிகள், சீவகசிந்தாமணி முக்தி இலம்பகம் 5 பாடல்கள்)

**கூறு 4:** தொல்காப்பியத் துறைகள் சிலவும் சங்க இலக்கியய் புறத்துறைகளுள் சிலவும் சிற்றிலக்கியங்களில் பரிணமித்துள்ளபோக்கினைவிளக்கல் - பரணி,கலம்பகம்,தனிப்பாடல்களின் புறப்பொருள் - கிறித்துவ இலக்கியத்தில் புறம் விரவியுள்ளவையைக் காணுதல். (பரணி 10,கலம்பகம் 10,தனிப்பாடல் 15, இரட்சண்யமனோகரம் 10)

**கூறு 5:** தற்காலக் கவிதைகளில் சூழலுக்கேற்பஉள்ளடக்கத்திலும் வடிவத்திலும் மாறிவரும் புறப்பொருள் கருத்துக்களைஎடுத்துக் காட்டல். (கவிதைகள்: சேரன்-வாழ்வும்,மரணமும் I, IIஆத்மநாம் - பிச்சை, இந்தநகரத்தைஎரிப்பது,அப்பாஸ் - துப்பாக்கி)

**பார்வை நூல்கள்**


1. டாக்டர்.ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பாரதி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை– 5, மு.ப. 1985.
2. க.ப.அறவாணன்,அற்றைநாட் காதலும்,வீரமும்,
3. சாமி. சிதம்பரனார், பதினெண்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், அறிவுப் பதிப்பகம், ராயப்பேட்டை,சென்னை– 14,மு.ப. அக்டோபர் - 2003.
4. அ.வேலுப்பிள்ளை, தமிழர் சமயவரலாறு, குமரன் பதிப்பகம்,சென்னை– 2012.
5. தோ.பரமசிவன், சமயங்களில் அரசியல், கங்குவெளியீடு, மு.ப. ஆகஸ்ட் - 2005.
6. நாஞ்சில் நாடன், சிற்றிலக்கியங்கள், தமிழினிபதிப்பகம், சென்னை– 17,மு.ப. 2014.
7. ஞானி,வானம்பாடிகளின் கவிதை இயக்கம்: வரலாறும்படிப்பினைகளும்,காவ்யா,சென்னை– 24,மு.ப. டிசம்பர் -2011.
8. சு.சண்முகசுந்தரம் (தொ.ஆ.),புதுக் கவிதையும்,புதுப் பிரக்ஞையும்,காவ்யா,பெங்களூரு– 38,மு.ப. 1985.
9. பொன்மணி,புதுக்கவிதையும் புதியகவிதையும்,சிப்பிபுக்ஸ்,சென்னை– 17,மு.ப. மார்ச் - 2009


| Bloom's Taxonomy | K1 | K2 | K3 | K4 | K5 | K6 |
|---|---|---|---|---|---|---|
| **CO1** | **1** | | | | | |
| **CO2** | | **2** | | | | |
| **CO3** | | | **3** | | | |
| **CO4** | | | | **4** | | |
| **CO5** | | | | | **5** | |

MEAN : 3

**TAM 2524** **இயக்கமும் இலக்கியமும்** **5 Hrs /5 Cre**

---

**நோக்கம் :**

உலகளாவிய அரசியல், சமூக, இலக்கிய இயக்கங்களின் உந்துதல்களால் உருப்பெற்று வளர்ந்துள்ள, வேறுபட்ட இலக்கியப் போக்குகளுள் குறிக்கத்தக்க சிலவற்றை, அவ்வவ் இயக்கங்களின் பின்னணியில் கண்டு விளங்கிக் கொள்வதே இப்பாடத்தின் நோக்கமாகும். பன்முகப்பட்ட இயக்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திடும் நாவல், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் முதலான இலக்கிய வகைமைகள் இப்பாடத்திட்டத்தினுள் இடம்பெறும்.

**கற்றலின் பயன்:**

1. உலகளாவிய ரீதியில் அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய இயக்கங்களின் உந்துதல்களால் உருப்பெற்று வந்துள்ள நவீன இலக்கிய வகைமைகளை அடையாளங்கண்டு பயிலும் திறன்களைப் பெற்றிருப்பர்.
2. இந்திய- தமிழக அளவிலான அரசியலில் தொடங்கி, இலக்கியத்தினுள் நுழைந்த இயக்கங்களை ஒப்பிட்டு அவற்றிற்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அறிகிற திறன்களை எய்தியிருப்பர்.
3. மேலைத்தேயக் கோட்பாடுகளின் தாக்கத்தால் இந்திய- தமிழகப் பரப்பில் உருப்பெற்ற கோட்பாடுகளைத் தேர்வு செய்து அவற்றை நவீனத் தமிழ்ப் புனைவுப் பிரதிகளோடு பொருத்திப் பார்க்கிற திறன்களை அடைந்திருப்பர்.
4. தமிழிலக்கியப் பரப்பில் தொடக்க காலத்தில் பரவிய, மேற்கத்திய இலக்கியக் கோட்பாடுகளின் தன்மைகள் குறித்துப் பகுத்துப் பார்த்து அவற்றிற்கிடையிலான தன்மைகளை வேறுபடுத்தி அறிகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
5. சமகாலத் தமிழிலக்கியச் சூழலில் பரவிய மேலையிலக்கியக் கோட்பாடுகளின் தன்மைகள் குறித்துத் திறனாய்கின்ற திறனையும், நவீனத் தமிழிலக்கியப் பிரதிகளிலிருந்து புதிதாக ஒரு கோட்பாட்டை உருவாக்குகிற ஆற்றலையும் அடைந்திருப்பர்.

**பாடத்திட்டம் :**

**கூறு 1 :** i.இயக்கம்/இலக்கியம்/கொள்கை/கோட்பாடு/தத்துவம்: விளக்கமும் விவரணைகளும். ii.இயக்கம்சார் இலக்கியங்களும் இலக்கியப் பனுவல்களுள் இயக்கங்களின் ஊடாட்டமும்.

**கூறு 2 :** இந்திய - தமிழக அளவில் அரசியற் களங்களில் முகிழ்த்து, இலக்கியப் பிரதிகளுக்குள் இழைவுற்ற இயக்கங்கள்:

**I.காந்தியம்** - i. பிரார்த்தனை (சி.சு.செல்லப்பா)

ii. பதச்சோறு (பி.எஸ். ராமையா)

iii. கங்கை இன்னும் வற்றிவிடவில்லை (நா.பார்த்தசாரதி)

**II.பெரியாரியம்** - i. கருப்பணசாமி யோசிக்கிறார், ii. சொர்க்கத்தில் நரகம், iii.செவ்வாழை (அறிஞர் அண்ணா)

